This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# புதிய நீதிக்கதை

## 1. எறும்பும் கூட்டுப்புழுவும்

சுதந்திரமாகத் திரிந்து கொண்டிருந்த ஓர் எறும்பு இரை தேடிக் கொண்டிருக்கும்போது ஒரு கூட்டுப்புழுவைப் பார்த்தது. அதனால் அதிகம் நகர முடியவில்லை. அதன் வால்பகுதி லேசாக ஆடியதைப் பார்த்து, 'அட! உயிர் இருக்கிறதே' என்று எறும்பு வியந்தது. 'புழுவே, என்ன மாதிரி ஜீவன் நீ? உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. என்னைப் பார்! இஷ்டப்படி எந்த மர உச்சிக்கும் ஏறிச் செல்ல முடிகிறது. சின்ன சின்ன சர்க்கரைத் துண்டுகளைக் கடித்து உருட்டிச் செல்ல முடிகிறது. இஷ்டப்பட்டபோது மனிதர்களையும் சுருக்கென்று கடித்து ஓடிப்போய் ஒளிந்து கொள்ள முடிகிறது. நீ? கூட்டுக்குள் அடைபட்டு வாலை மட்டும்தான் ஆட்டுகிறாய்! அதும் முழு வால் இல்லை. ஏதோ ஓரிரண்டு பகுதிகளை மட்டும்தான் அசைக்க முடிகிறது. என்ன பிழைப்பு இது!' என்றது.



கூட்டுப்புழு பேசவே இல்லை.

சிலநாள் கழித்து எறும்பு அந்த வழியே ஊர்ந்து சென்று கொண்டிருந்தபோது, 'எறும்பனாரே!' என்று குரல் கேட்டுத் திரும்பியபோது, ஓர் அழகான வண்ணத்துப் பூச்சி, 'என்னைப் பார்! நீ எத்தனை பரிதாபத்துக்குரியவன். மரத்தில் ஏறுவதையும், இறங்குவதையும் தவிர வேறு என்ன தெரியும் உனக்கு? இதைப்போய் பெருமையாய் பேசிக் கொண்டாய்! நானும் சும்மா இருந்தேன். இப்போது கேட்க எனக்கு டயமே இல்லை. நான் போகிறேன். பறந்து உல்லாசமாக தேன் உறிஞ்ச வேண்டும். மலர்களின் அழகை ரசிக்க வேண்டும். நானும் அழகழகான இறக்கைகள் ஜொலிக்க பறக்க வேண்டும். எத்தனையோ வேலை!' என்று வசந்த காலக் காற்றில் மிதந்து சென்றது வண்ணத்துப் பூச்சி.

எறும்பு திரும்பிப் பார்ப்பதற்குள் அங்கு ஒரு வண்ணக் கலவை தோன்றி மறைந்தது.

***நீதி: எல்லாருக்கும் சிறப்படையும் சமயம் வந்தே தீரும்.***

## 2. கழுதையும் வழிப்போக்கனும்

ஒரு வழிப்போக்கன் தன் வழியே செல்வதற்காக ஒரு கழுதை வாங்கினான். ரொம்ப வெயிலாக இருந்தது. அதனால் புறப்படுமுன் கழுதையின் நிழலில் இளைப்பாறத் தீர்மானித்தான்.